# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதிவிசேஷமானது

අංක 14,473 — 1965 අගෝස්තු 7 වැනි සෙනසුරාදා — 1965.8.7

14,473 ம் இலக்கம் — 1965 ம் ஆண்டு ஒகத்து மாதம் 7 ந் திகதி சனிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

## விலைக் கட்டளைகள்

*உணவு விலைக்கட்டளை எப்/சி/எம்/80.* **மாட்டிறைச்சி.**

### விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

**கட்டளை**

(173 ம் அத்தியாயமான) விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவினால் புத்தளம் மாவட்ட பிரதி உணவு விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிக்கு அளிக்கப் பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு, ரெவிஸ் அகஸ்தீன் லெடிஸ்லாவுஸ் லுடுவைக் ஆகிய நான் இக்கட்டளையால்—

(1) 1964 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 2 ந் திகதி 14,190 இலக்க இலங்கை அரசாங்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப் பட்டுள்ள எப்/சி/எம்/76 ம் இலக்கம் கொண்டதும் 1964 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 29 ம் திகதியிடப்பட்டதுமாகிய எனது உணவு விலைக்கட்டளையை இத்திகதியிலிருந்து எடுத்துவிடுகிறேன்.

(2) இதனோடிருக்கும் அட்டவணையின் 2 ம் 3 ம் பந்திகளில் விபரிக்கப்பட்டுள்ள விலைகளை முறையே அப்பந்திகளின் தலைப்பில் குறிப்பிடப்பட்ட விவரணத்தையும் தரத்தையும் உடைய மாட்டிறைச்சி ஒரு இறுத்தல் அவ்வட்டவணையில் அவற்றுக்கியைய 1 ம் பந்தியில் சொல்லப்பட்ட இடங்களில் அதற்குமேல் விற்கப்படலாகா ஆகக்கூடிய விலையாக உடனடியாக நடைமுறையில் வருமாறு விதிக்கிறேன்.

(3) இக்கட்டளையின் நோக்கத்திற்காக—

(அ) "மாட்டிறைச்சி" என்னும் கூறறு இறக்குமதி செய்யப்பட்ட, உறையச்செய்யப்பட்ட அல்லது குளிரூட்டப்பட்ட மாடடிறைச்சி யையும், எவ்வகையான கழிவுப் பொருளையும் உள்ளடக்காது;

(ஆ) "மாட்டிறைச்சி" என்பது மாட்டினதும் எருமையினதும் இறைச்சி எனப்பொருள்படும். ஆனால் எல்லாவித கழிவுப் பொருள்கள் தவிர்ந்ததாதல் வேண்டு மெனவும்;

(இ) எம்மிருகத்தின் சடலமேனும் கொலைக்களத்தில் விற்பனைக்குத் தயாராக்கப்பட்ட படி (தலை, தோல், குடல், குளம்புகள், கழிவுகள் மற்றும் வழமையாகக் கழிக்கப்படும் எல்லாக் கழிவுப் பொருள்களும் தவிர) விற்கப்படும் பொழுது அவ்விற்பனை "உயிரற்ற நிறை" யில் விற்பனையாக்கக் கருதப்படல் வேண்டுமெனவும் கட்டளையிடுகிறேன்.

(4) மாட்டிறைச்சி எலும்புகளுடன் விற்கப்படுமிடத்து அதனுடன் சேர்ந்த எலும்பின் நிறை விற்கப்படும் மொத்த நிறையின் 25 சத விகிதத்திற்கு மேற்படலாகாது என்றும் கட்டளையிடுகிறேன்.

(5) இதற்குள்ள அட்டவணையின் 1 ம் பந்தியிற் குறிப்பிடப்பட்ட இடப்பரப்பில் எவ்விடத்திலேனும் அவ்வட்டவணையில் குறிப்பிடப்பட்ட விபரமும், தரமும் கொண்ட மாட்டிறைச்சியை தம்வசத்தில் வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும், அவ்விடத்தில், அவ் விபரத்தையும் தரத்தையும் கொண்ட மாட்டிறைச்சிக்கு இக்கட்டளையால் விதிக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய விலைகளைக்காட்டும் அறிவித்தல் ஒன்றைப் பகிரங்கமாக்கப் பார்வைக்கு வைக்கவேண்டுமெனக் கட்டளையிடுகிறேன்.

(6) மாட்டிறைச்சி விற்பதற்கென ஒதுக்கப்பட்டுள்ள கடைகளில் மாத்திரம் மாட்டிறைச்சி விற்கவோ அல்லது விற்பனைக்காக வைத்திருக்க வோ வேண்டு மென்றும், இக்கடைகளிற் குறிப்பிட்ட விபரமும் தரமும் கொண்டு மாட்டிறைச்சியன்றி வேறெந்த வகையான இறைச்சியையும் விற்கக்கூடாதெனவும் கட்டளையிடுகிறேன்.

(7) அட்டவணையின் 1 ம் பந்தியில் குறிப்பிட்ட இடப்பரப்பினுள்ள எவ்விடத்திலாவது குறித்த அட்டவணையில் விபரிக்கப்பட்ட விபரமும் தரமும் கொண்ட மாட்டிறைச்சியை விறபனைக்கு வைத்திருக்கும் வியாபாரி ஒவ்வொருவரும் அத்தகைய மாட்டிறைச்சி விற்கப்படும் அக்கடையில் அத்தகைய விபரத்தையும் தரத்தையும் கொண்ட மாட்டிறைச்சி மட்டுமே விற்கப்படுகின்றது என்னும் பொருள்கொண்ட அறிவித்தல் ஒன்றைப் பகிரங்க பார்வைக்கு வைத்தல் வேண்டுமென்றும் கட்டளையிடுகிறேன்.

(8) ஒரு விற்பனையில் மாட்டிறைச்சியுடன் கழிவுகளும் விற்கப்படின் மாட்டிறைச்சி கழிவுகளிலிருந்து வேருக நிறுத்து விற்கப்படல் வேண்டுமென கட்டளையிடுகிறேன்.

(9) ஒவ்வொரு வியாபாரியும் மாட்டிறைச்சி விற்கும் பொழுது தன்னுடைய நிறுக்கும் தராசையோ தராசுகளையோ வாங்குபவர் தாம் வாங்கும் மாட்டிறைச்சியின் உண்மையான நிறையை இலகுவாக அறிந்து கொள்ளக்கூடிய விதமாக வைத்தல் வேண்டுமெனவும் கட்டளையிடுகிறேன்.

(10) இதற்குள்ள அட்டவணையிற் குறிப்பிட்டுள்ள விபரத்தையும் தரத்தையும் கொண்ட மாட்டிறைச்சியை விற்கும் ஒவ்வொரு வியாபாரியும் மாட்டிறைச்சி வாங்குபவர் கேட்குமிடத்து அன்னாருக்குப் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டுப் பற்றுச்சீட்டொன்று கொடுத்தல் வேண்டுமென்றும் கட்டளையிடுகிறேன்.

(அ) விற்பனை நடந்த திகதி ;

(ஆ) விற்பனை செய்யப்பட்ட மாட்டிறைச்சியின் நிறை ;

(இ) விற்பனை செய்யப்பட்ட மாட்டிறைச்சியின் விபரம் ;

(ஈ) விற்கப்பட்ட மாட்டிறைச்சிக்குக் கொடுக்கப்பட்ட விலை.

(11) இக்கட்டளையினால் ஆகக்கூடிய விலை நிர்ணயிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பொருளை வேறு எந்த இறைச்சியுடனும் மாமிசத்துடனும் கலந்து விற்றல் ஆகாதெனக் கட்டளையிடுகிறேன்.

(12) குறித்த அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள பொருள் விற்குமிடத்து அட்டவணையின் 2 ம் 3 ம் பந்திகளில் குறிப்பிட்டுள்ள ஆகக் கூடிய விலைகள் அவ்வவ்வாறு விற்கப்படும் பொருளைச் சுற்றிக கொடுக்கும் கொள்கலம் ஏதாவது உபயோகிக்கப்படின் அதன் விலையையும் அடங்கியதாதல் வேண்டுமெனக் கட்டளையிடுகிறேன்.

(13) இக்கட்டளையின் நோக்கத்திற்காக "இருத்தல்" அல்லது "இரு." என்பது நிறுத்தலளவை முறையின் பிரமாண அவோடுபோஸ இருத்தலாகக் கருதப்படவேண்டுமெனக் கட்டளையிடுகிறேன்.

1965 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 3 ம் திகதி பி.ப. 4.00 மணிக்கு புத்தளம் கச்சேரியில் கையொப்பமிடப்பட்டது.

ரீ. ஏ. எல். ஹுடுவைக்,
பிரதி உணவு விலைக்கட்டுப்பாட்டதிகாரி,
புத்தள மாவட்டம்.

**அட்டவணை**

**மாட்டிறைச்சியின் ஆகக்கூடிய விலைகள்**

| பத்தி 1<br>எல்லை | பத்தி 2<br>மாட்டிறைச்சி<br>(எலும்பில்லாமல்)<br>ஒரு இருத்தல்<br>ரூபா சதம் | பத்தி 3<br>மாட்டிறைச்சி<br>(எலும்புடன்)<br>ஒரு இருத்தல்<br>ரூபா சதம் |
|---|---|---|
| 1. பிற்றிகல் கோறளை தெற்கு காரியாதிகாரியின் எல்லைக்குள் .. .. | 0 90 .. | 0 80 |
| 2. மாதம்பை பட்டின சபை எல்லை, சிலாபம் நகர சபை எல்லைகள் தவிர பிற்றிகல் கோறளை வடக்குக் காரியாதிகாரியின் எல்லைக்குள் .. .. .. | 0 80 .. | 0 70 |
| 3. சிலாபம் நகரசபை எல்லைக்குள் .. .. .. | 0 90 .. | 0 80 |
| 4. மாதம்பை பட்டின சபை எல்லைக்குள் .. .. .. | 0 80 .. | 0 70 |
| 5. புத்தளம் நகரசபை எல்லை உட்பட புத்தளம் பத்துவும் இறவட்ஸ் காரியாதிகாரியின் எல்லைக்குள் | 0 85 .. | 0 75 |
| 6. கற்பிட்டி பட்டின சபை எல்லைகள் உட்பட கற்பிட்டி காரியாதிகாரியின் எல்லைக்குள் .. | 0 95 .. | 0 85 |
| 7. ராஜவன்னிப் பத்து குமாரவன்னிப்பற்று காரியாதிகளின் எல்லைக்குள் .. .. | 0 85 .. | 0 75 |

**குறிப்பு.**—இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருள்களை விற்கவேண்டுமென விதிக்கப்பட்ட விலைகளல்ல ; இவை ஆகக்கூடிய விலைகளாகும். இவ்விலைகளுக்கு மேலாக அப்பொருட்களை விற்றலாகாது.

8–329

---

உணவு விலைக்கட்டளை இலக்கம்: கே. ஈ. 118 **உப உணவுப் பொருள்கள்.**

## விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்

### கட்டளை

(173 ம் அத்தியாயமான) விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 3 (2) ம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 4 ம் பிரிவினால் எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக்கொண்டு கேகாலை மாவட்டத்து உதவி விலைக்கட்டுப்பாட்டு அதிகாரி (உணவு) ஆகிய கொட்வின் கொடிதுவக்கு ஆகிய நான் இக்கட்டளையால்:

(i) 1963 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 30 ந் தேதி வெளியரன 13,744 இலக்க அதிவிசேட கசெற்றில் பிரசுரமான 1963 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 24 ந் தேதியைக்கொண்ட கே. ஈ. 107 இலக்க விலைக்கட்டளையை இப்போதிருந்தே உடனடியாக நீக்கிவிடுகிறேன்.

(ii) (173 ம் அத்தியாயமான) விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரகாரம் கொழும்பு மாநகர எல்லைக்குள் மொத்த வியாபாரிகளின் உச்ச மொத்த விலையாக இப்போதைக்கென விதிக்கப்பட்ட விலையுடன் இதற்குள்ள அட்டவணையின் 3 ம் பத்தியில் குறிக்கப்பட்ட தொகை கூட்டப்பட்ட விலையே அவ்வட்டவணையின் 2 ம் பத்தியில் விஸ்தரிக்கப்பட்ட இடப்பரப்புகளில் அல்லது நிர்வாக மாவட்டங்களில் 1 ம் பத்தியில் முறையே விபரிக்கப்பட்ட பொருள்களின் அதற்குக்கூடிய விலைக்கு விற்றலாகாத மொத்த அந்தரின உடனேயே நடைமுறையாகும் மொத்த விலையாக விதிக்கிறேன்.

(iii) (173 ம் அத்தியாயமான) விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரகாரம் கொழும்பு மாநகர எல்லைக்குள் சில்லறை வியாபாரிகளின் உச்சச் சில்லறை விலையாக இப்போதைக்கெனக் குறிப்பிட்ட விலையுடன் 4 ம் பத்தியிற்குறிக்கப்பட்ட தொகையைக்கூட்டிய விலையையே குறித்த அட்டவணையின நேரொத்த 1ம் பத்தியில் சொல்லப்பட்ட பொருள்களின் அவ்வட்டவணையின் 2 ம் பந்தியிற்குறிப்பிடப்பட்ட இடப்பரப்பிலுள்ள அல்லது மாவட்ட எல்லைக்குள் அதற்குக்கூடிய விலைக்கு விற்றலாகாத நிகர இருத்தல் ஒன்றின் ஆகக்கூடிய சில்லறை விலையாக உடனடியாக நடைமுறையில் வரும்படி விதிக்கிறேன்.

(iv) இக்கட்டளையின் நோக்கத்திற்காக—

(அ) குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளின் எத்தொகையையாவது திருப்பி விற்பதற்காக விற்றல் அல்லது குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளை ஒரு மொத்த அந்தர் தொகையில் அல்லது அதற்குக்கூடிய தொகையில் ஒரு தடவையில் விற்றல் மொத்த விற்பனையாகுமெனவும் ;

(ஆ) குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளின் மொத்த அந்தருக்குக் குறைந்த எத்தொகையாவது பாவிப்புக்கு அல்லது உபயோகத்திற்காக விற்றல் சில்லறை விற்பனையாகுமெனவும் ஆஞ்ஞையிடுகிறேன்.

(v) குறித்த அட்டவணையின 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட எப்பொருளையேனும் வேறொரு பொருளோடு கலந்து இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள எந்த ஒரு இடத்திலும் எவராவது விற்றலாகாது என ஆஞ்ஞையிடுகிறேன்.

(vi) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட எப்பொருளையேனும் தம்வசத்தில் அல்லது தமது கட்டுப்பாட்டில், எவ்விடத்திலாவது, வாகனத்திலாவது வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் அவ்விடத்தில் அல்லது அவ்வாகனத்தில் தகுந்த ஒரு கொள்கலத்தில் குறிப்பிட்ட ஒரு பொருளின் சிறு தொகையையும், இக்கட்டளையால் அப்பொருளுக்கு விதிக்கப்பட்ட ஆகக்கூடிய விலையையும் ஒரு அங்குல உயரத்துக்குக் குறையாத எண்களில் விலை அட்டைகளில் அல்லது பலகைகளில் எழுதி அப்பொருளும் ஆகக்கூடிய விலையும் வாங்குபவரால் நன்றுகப் பார்க்கக்கூடியவாறு அக்கொள்கலத்தில் இணைத்து பகிரங்கமாகப் பார்வைக்கு வைத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(vii) இக்கட்டளையின் நோக்கத்திற்காக " இருத்தல் " அல்லது " இரு. " என்பது அவோர்டுபோஸ் எடுத்தலளவை முறையின் பிரமாண இருத்தல் நிறையாகக் கருதப்படுமெனறு ஆஞ்ஞையிடுகிறேன்.

(viii) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் குறித்த அட்டவணையின் 1 ம், 2 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட பொருள் எதனையும் மொத்தமாக விற்கும் ஒவ்வொருவரும் குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஏதாவதொரு பொருளைச் சில்லறையாக விற்கும் ஒவ்வொருவரும் அப்பொருளை வாங்குவோர் கேட்குமிடத்து அன்னருக்குப் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டுப் பற்றுச்சீட்டொனறு கொடுத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் :—

(அ) விற்பனை நடந்த தேதி ;

(ஆ) விற்ற பொருளின் தொகை (நிறையில்) ;

(இ) விற்ற தொகைக்குக் கொடுத்த விலை ;

(ஈ) எவ்வித விற்பனை, அதாவது மொத்த விற்பனையா அல்லது சில்லறை விற்பனையா என்பது.

(ix) குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஏதாவதொரு பொருள் விற்கப்படுமிடத்து அட்டவணையின் 3 ம், 4 ம் பத்திகளிற் குறிக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய விலைகளுள் அவ்வாறு விற்கப்படும் பொருளைச் சுற்றிக் கொடுக்கும் உறை அல்லது வைத்துக்கொடுக்கும் கொள்கலம் ஏதாவது உபயோகிக்கப்படின் அதன் விலையும் அடங்கவேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

1965 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 3 ந் தேதி முற்பகல் 10.00 மணிக்கு கேகாலை கச்சேரியில் கையொப்பமிடப்பட்டது.

கொ. கொடிதுவக்கு,
உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு),
கேகாலை மாவட்டம்.

**அட்டவணை**

| பத்தி 1<br>பொருளின் விபரம் | பத்தி 2<br>பரிபாலன மாவட்டத்தின் இடப்பரப்பு | பத்தி 3<br>கொழும்பு மாநகர எல்லைக்குட்பட்ட மொத்த வியாபாரிகளின் மொத்த அந்தர் ஒன்றுக்குக் கூட்டவேண்டிய விலை<br>ரூ. ச. | | பத்தி 4<br>கொழும்பு மாநகர எல்லைக்குட்பட்ட சில்லறை வியாபாரிகளின் இருத்தல் ஒன்றுக்குக் கூட்ட வேண்டிய விலை<br>ரூ. ச. |
|---|---|---|---|---|
| 1. மசூர்ப்பருப்பு (ரகம் 1) இறக்குமதி செய்யப்பட்டது<br>2. மசூர்ப்பருப்பு (ரகம் 2) உள்ளூரில் குத்தப்பட்டது | 1. பறனகுரு கோறளைப் பெரும்பாக இறைவரி உத்தியோகத்தரின் பிரிவு | 2 0 | .. | 0 2 |
| | 2. பெலிகல் கோறளைப் பெரும்பாக இறைவரி உததியோகத்தரின பிரிவு | 2 0 | .. | 0 2 |
| | 3. கல்பொட கினிகொட கோறளைகளின் பெரும்பாக இறைவரி உத்தியோகத்தரின பிரிவு | 2 0 | .. | 0 2 |
| | 4. அற்றுனுகம் பனவல் கோறளைகளின் பெரும்பாக இறைவரி உத்தியோகத்தரின் பிரிவு | 2 0 | .. | 0 2 |
| | 5. டெகிகம்பல்கோறளையும் கீழ் புலத்கமாவின் பெரும்பாக இறைவரி உத்தியோகத்தரின் பிரிவு | 2 0 | .. | 0 2 |

**குறிப்பு.**—இவ்விலைகள் பொருடகள் விற்கப்பட வேண்டிய குறிப்பிட்ட விலைகளல்ல ; இவை அவற்றிலும் **பார்க்கக் கூடிய விலைக்கு** விற்றலாகா உச்ச விலைகளாகும்.

8-330

இலங்கை வாழைச்சேனை சன்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்தி செய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்தில் பதிப்பிக்கப்பெற்றது.